1990 ஆகஸ்ட் 21]

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 37/1990) நிறைவேற்றப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு, நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (22-8-1990) 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 14-28 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

44. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதிமுறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர்—நிருவாகச் சீர்த்திருத்தத் துறையின் 13-12-1989 ஆம் நாளிட்ட 657 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (இந்திய அரசியல் சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

45. கும்பகோணம், தூய இருதய தொழுநோய் மையத் தினருக்குச் சொந்தமான டி. ஏ. ஒ. 9195 எண் கொண்ட ஆம்புலன்ஸ் வண்டிக்கு சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து உள் (போ. 1) துறையின் 23-4-1990 ஆம் நாளிட்ட 866 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

46. சென்னை, புற்றுநோய் நிலையத்தினருக்குச் சொந்த மான டி. எஸ். ஏ. 8700 எண் கொண்ட வாகனத்திற்கு சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து உள் (போ. 1) துறையின் 31-3-1990 ஆம் நாளிட்ட 701 ஆம் எண் அரசாணையில் வெளி யிடப்பட்ட அறிவிக்கை [1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

47. 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 30-9-1988 ஆம் நாளிட்ட 2156 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்கு முறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

48. விற்பனை அல்லது உபயோகத்திற்காக, எந்த ஒரு உள்ளாட்சிப் பகுதிக்குள் நுழையும் எந்த ஒரு இயக்கூர்தியின் மீது வரி விதிப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக் கட்டளைகள் துறையின் 20-2-1990 ஆம் நாளிட்ட 06 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

49. 1987-88 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் ஐந்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

50. 1987-88 ஆம் ஆண்டிற்கான அயல் நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் பத்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.

51. 1984-85 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிருவாக அறிக்கை [(1948 ஆம் ஆண்டு மின்சாரம் வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 75 (1) (ஏ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது[

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்·

53. தமிழ்நாட்டின் மாநில பொதுத்துறை நிறுவனங்க மீதான ஆய்வுரை, 1988-89 (ஆங்கிலம்).